**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

**O.S.No.43/2020** **D.W. 2**

Deposition of witness for solemnly affirmed by Tmt.S.Sangeetha,Assistant of this court on 17.08.2026 in accordance with the provision of the Act 1873.

| | |
|---|---|
| Name: | சங்கர் |
| Father Name: | கதிர்வேல் |

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கு விவரங்களை படித்துப் பார்த்து தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். தாவா சொத்து ஆதியில் 1ம் வாதியின் தாயார் அங்காயிக்கு பூர்வீகமாகவும், பட்டாப்படியும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி அங்காயிக்கு, 1ம் வாதி, 1, 3, 4 பிரதிவாதிகள் மற்றும் பாப்பம்மாள் மற்றும் காலம்சென்ற பழனிசாமி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். மேற்படி பழனிசாமிக்கு வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார். மேற்படி அங்காயிக்கு ச.எண்.58/2ல் 1ஏக்கர் நிலம் இருந்தது என்றால் சரிதான். தற்போது யுடிஆர் சர்வேபடி ச.எண்.58/2ல் 75 செண்ட் நிலம்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 75 செண்ட் நிலத்தை அங்காயி 3 தாக்குகளாக பிரித்து அதில் நடுத்தாக்கான 25செண்ட் நிலத்தை கடந்த 26.08.1987 தேதியில் 3ம் வாதி பன்னீர்செல்வம் பெயரில் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் எழுதிவைத்ததாக பேசிக்கொண்டனர். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சொன்னார்கள் சரிதான்.

மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி 3ம் வாதி மேற்படி சொத்தை உட்பிரிவு செய்து வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல, பழைய வீடுதான் ஒன்று உள்ளது. மேற்படி 3ம் வாதி தானசெட்டில்மெண்ட்டிற்கு பின்னிட்டு ச.எண்.58/2 ஆனது உட்பிரிவு செய்யப்பட்டு 58/2A, 58/2B, 58/2Cஆக உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் உட்பிரிவு செய்யப்பட்ட விவரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் சொன்னார்கள் தெரிந்துக்கொண்டேன். இவ்வழக்கு பிராதில் ச.எண்.58/2B 3ம் வாதியான பன்னீர்செல்வத்திற்கு பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

தற்போது வரை 58/2B 3ம் வாதியான பன்னீர்செல்வத்தின் பெயரில்தான் உள்ளது என்றால் சொன்னார்கள் உள்ளது. ச.எண்.58/2A, 58/2C நிலங்கள் தற்போதுவரை அங்காயி பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அங்காயி இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சுமார் 17 வருடங்களுக்கு முன்பே காலமாகிவிட்டார் என்றால் சரிதான். எனவே தாவா சொத்தில் 1ம் வாதி, 1, 3, 4 பிரதிவாதிகள் மற்றும் 6ம் பிரதிவாதியின் தாயாரான பாப்பாயி ஆகியோர்களுக்கு தாவா சொத்துக்களில் பொதுவில் தலா 1/5 ஒருபாகம் என்றால் சரிதன். கடந்த 02.03.2000ம் தேதியில் 3ம் பிரதிவாதியான சின்னக்கண்ணு மற்றும் 6ம் பிரதிவாதியின் தாயாரான பாப்பாயி ஆகியோர்கள் தங்களது 2/5 பங்கினை 1ம் வாதிக்கு கிரையம் செய்துகொடுத்துள்ளனர் என்று சொன்னால் சரிதான். எனவே 1ம் வாதிக்கு தாவா சொத்தில் 3/5 பங்கு பாத்தியம் என்று சொன்னால் சரிதான். 1, 4 ம் பிரதிவாதிகளுக்கு தலா 1/5 ஒரு பாகம் என்றால் சரிதான். அதேபோல் 4ம் பிரதிவாதி தாவா சொத்தில் தனக்கு பாத்தியப்பட்ட 1/5 ஒருபங்கை தனது மகளான 5ம் பிரதிவாதி பானுமதி பெயரில் 26.07.2000ம் தேதியில் ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

1ம் வாதியும், 1, 4, 5 பிரதிவாதிகளும் 1லக்க சொத்தில் அனுபவித்து வருவதற்காக வசதிக்கேற்ப வாய்மொழியாக 1லக்க சொத்தின் வடபுறத்தை 1ம் வாதியும், தென்புறத்தை 1, 4, 5 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான் ஆனால் காடாகதான் உள்ளது. தாவா 5ம் பிரதிவாதியான பானுமதி, 2ம் பிரதிவாதி தமிழ்செல்வனின் சகோதரரான சுகுமாரின் மனைவி என்றால் சரிதான். அதேபோல் 2ம் பிரதிவாதியான தமிழ்செல்வன் 1ம் பிரதிவாதியின் மகன் வயிற்று பேரன் என்றால் சரிதான். 1, 2, 4 மற்றும் 5 பிரதிவாதிகள் ஒரே குடும்பமாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம் வாதி அவருடைய இன்னொரு மகனான சந்திரன் என்பவருக்கு ச.எண்.58/2Aன் வடபுறத்தில் வீடு கட்டுவதற்காக கடந்த 23.03.2000ம் தேதியில் ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் இவ்வழக்கில் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின்படி சந்திரன் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் ஒரு குடிசை வீடு போட்டு வசித்து வருகிறார். இவ்வழக்கின் 5ம் பிரதிவாதியான பானுமதியும் அவரது கணவரான சுகுமாரும் சேர்ந்து 1ம் வாதிக்கு எதிராக நாமக்கல் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இயங்கி வரும் நிலஅபகரிப்பு பிரிவில் ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி புகாரை பற்றியும், அதை பாபு என்கிற உதவி ஆய்வாளர் விசாரித்த விவரமும் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. 1ம் வாதியை மிரட்டி காவலரிடம் அழைத்து சென்று 03.01.2012ம் தேதியில் மிரட்டி தாவா சொத்துக்கள் குறித்து ஏற்பட்ட இரண்டு தானசெட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் கிரையப்பத்திரத்தை ரத்து செய்துகொடுக்க வேண்டும் என்று சொல்லி சம்மந்தப்பட்ட ஆவணங்களை தயாரித்து வைத்து அதில் கையெழுத்து செய்ய வேண்டும் என்றும் மிரட்டி மேற்படி 3ரத்து பத்திரங்கள் ஏற்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல. மிரட்டி ரத்து பத்திரங்களை வாங்கவில்லை. மேற்படி விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது எனது தாயார் சொல்லிதான் தெரியும்.

உண்மையில் மிரட்டிதான் பத்திரங்களை வாங்கினார் என்றும் பொய்யாக எனது தாயாார் சொல்லிதான் தெரியும் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதியான சடையனுக்கு படிப்பறிவு இல்லை என்றால் சரிதான், ஆனால் கையெழுத்து செய்வார். மேற்படி 1ம் வாதிக்கு படிப்பறிவு இல்லாததால் காவல் உதவி ஆய்வாளர் உதவியுடன் மிரட்டி மேற்படி ரத்து பத்திரங்கள் ஏற்பட்டுள்ளதால் மேற்படி ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் வாதிக்கு படிப்பறிவு இல்லாததால் வெளி அனுபவம் இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் ஓரளவிற்குதான் வெளிஅனுபவம் இருக்கும் என்று சாட்சியமளிக்கிறார். மேற்படி 03.02.2012 தேதியில் ஏற்பட்டதாக சொல்லக்கூடிய ஆவணங்களின் விவரங்களை படித்துக் காண்பிக்காமல் 1ம் வாதியிடம் மிரட்டி கையொப்பம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. சந்திரன் மற்றும் பன்னீர்செல்வம் மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் கட்டியுள்ள வீட்டை இடித்து அப்புறப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் தாவா

சொத்தில் 1ம் வாதிக்கு 1/5 ஒரு பாகம்தான் உள்ளது என்று மிரட்டி சென்றுள்ளதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. கடந்த 23.06.2012 தேதியில் 1ம் வாதி நகல்போட்டு பார்த்தபோதுதான் மேற்படி 3 ரத்துபத்திரங்கள் பற்றிய விவரம் 1ம் வாதிக்கு தெரியவந்தது என்று சொன்னால் சரியல்ல, நாங்கள் நகல் போட்டுபார்த்தபோதுதான் தெரியவந்தது.

மேற்படி 3 ரத்துபத்திரங்கள் பத்திரபதிவு சட்டப்படி மேற்படி பத்திரங்களை ர்த்து செய்ய எவ்வகை வழிவகை இல்லை என்றும் மேற்படி ரத்து பத்திரங்கள் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெரியசாமிக்கு தாவா சொத்தில் 1/5 ஒருபாகம் என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் தனக்கு பேர்பாதி என்று குறிப்பிட்டு 2ம் பிரதிவாதியான தமிழ்செல்வனுக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளது செல்லாது என்று சொன்னால் சரிதான். அதேபோல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பெயருக்கு தாவா சொத்தல் பேர்பாதி சொத்து எழுதிக்கொடுக்க உரிமையில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் அடிப்படையில் தாவா சொத்தை 2ம் பிரதிவாதி அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் பட்டா தற்போதுவரை அங்காயி பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அங்காயிடம்தான் அனுபவம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி அங்காயிக்கு பாத்தியப்பட்ட சொத்தை பெரியசாமி ஒருபோதும் அனுபவித்தது இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையில்லை என்றும், அங்காயின் சுவாதீன அனுபவித்தில் இருந்ததாலும், அவர் பெயரில் பட்டா பதிவாகியுள்ளது என்றாலும், பெரியசாமிக்கு உரிமை இருந்தாலும் அது நீண்ட நெடுங்காலமாக 1ம் வாதியின் தாயார் எதிரிடை அனுபவப்படி பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

எனவே வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. எனவே 3 மற்றும் 6 பிரதிவாதிகள் கடந்த 03.02.2012 ம் தேதியில் ஏற்படுத்திக் கொண்ட 02.03.2000 தேதியிட்ட

கிரையப்பத்திரத்தின் ரத்து பத்திரம் செல்லக்கூடியதல்ல என்று விளம்புகை செய்தும், தாவா 1 முதல் 3 சொத்துக்கள் குறித்து கடந்த 03.03.2012ம் தேதியில் எருமப்பட்டி சார்பதிவாளர் ஆவண எண்.581/2011ன்படியும் பத்திரத்தை பொறுத்து ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்தும், அதேபோல் தாவா 1 முதல் 3 சொத்துக்கள் குறித்து கடந்த 03.03.2012ம் தேதியில் எருமப்பட்டி சார்பதிவாளர் ஆவண எண்.580/2011ன்படியும் பத்திரத்தை பொறுத்து ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்தும் தாவா சொத்துக்களை பொறுத்து 5 சமபாகங்களாக பிரிவினை செய்து அதில் 3 பாகத்தில் 3, 4 வாதிகள் வீடு கட்டி அனுபவித்து வரும்வகையில் Equity அடிப்படையில் வாதிகளுக்கு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்துவிவரம் சரியா என்றால் சரிதான், ஆனால் அங்காயி பெயரில் உள்ள சொத்தை மட்டும்தான் காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் எனது அப்புச்சி பெயரில் உள்ள 1 1/2 ஏக்கர் சொத்து சடையன் மற்றும் பெரியசாமி பெயரில் பட்டாவாகியுள்ளது. மேற்படி சொத்தை இவ்வழக்கில் காண்பிக்கவில்லை.

மேற்படி எனது அப்புச்சி பெயரில் உள்ள சொத்துக்களுக்கு உண்டான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்வில்லை என்றால் சரிதான். மேற்படி அப்புச்சி பெயரில் உள்ள சொத்துக்களுக்கு இவ்வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி அப்புச்சி பெயரில் உள்ள சொத்துக்களுக்கும், தாவா சொத்துக்களுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். எனது பிரமாணப்பத்திரத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் அதை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்துள்ளேன். எனது பிரமாணப்பத்திரத்தில் என்ன சொல்லியுள்ளேன் என்றால் 2000ம் வருடத்தில் எனது அம்மா சின்னக்கன்னு, பெரியம்மா மற்றும் சடையன் ஆகியோர்கள் பன்னீர்செல்வம் அழைத்துச் சென்று இன்சூரன்ஸ் போட்டுத் தருவதாக சொல்லி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கூட்டிச்சென்று கையெழுத்து பெற்றுள்ளார். இரண்டு மூன்று வருடங்களுக்கு பிறகுதான் மேற்படி விவரங்கள் தெரியும்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 கிரையப்பத்திரத்தில் எனது தாயார், பெரியம்மா ஆகியோர்கள் சடையனுக்கு ரூ.10 ஆயிரத்திற்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு எழுதப்படிக்க தெரியாது, கையெழுத்து செய்துகொடுத்துள்ளார்கள். உண்மையில், சரியான பிரதிபிரயோஜனத்திற்கு பணம் பெற்றுக்கொண்டு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது கிரைய ஆவணத்தை எழுதப்படிக்க தெரியாது என்றும் கையொப்பம் செய்துவிட்டார்கள் என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாணப்பத்திரத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் ஜோடிக்கப்பட்டவை, பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சரியான மறுபயனுக்கு ஏற்பட்டதால் அது செல்லக்ககூடியது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்காக தாவா சொத்துபோக இதர சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்தாக இருப்பதாகவும் மேறபடி சொத்துக்கள் வழக்கில் சேர்க்கவில்லை என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் இதர சொத்துக்கள் இருந்திருந்தால் அதைபொறுத்து ஆவணங்கள் தாக்கல் செய்திருப்போம் என்றும் வழக்கிற்காக பொய்யாக இதர சொத்துக்கள் இருப்பதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எனவே இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் செலவுத் தொகையுடன் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –இல்லை.**

**Sd/-E.Ridhula**
**DM,SDM.**

**Sd/-Sankar(DW2)**